## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இன்றைக்கு 3 மானியங்கள் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. 3 அமைச்சர்கள் பதில் சொல்ல வேண்டி இருக்கிறது. அதனால் காலத்தின் அருமை கருதி, அடுத்த விஷயத்திற்கு நான் போகிறேன். (குறுக்கீடுகள்) திரு. சி.வி. சண்முகம் சொல்வது எல்லாம் ரெக்கார்டில் பதிவாகாது. உட்காருங்கள். (குறுக்கீடுகள்)*

## 3. அறிக்கைகள் அளித்தல்

### பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.*

**திரு. கி. ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008–2009 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவின் நூற்று இருபத்து எட்டு முதல் நூற்று முப்பது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.*

## 4. மானியக் கோரிக்கைகள், 2009–2010, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண் 6 – கால்நடை பராமரிப்பு (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)**

**(ஆ) கோரிக்கை எண் 7 – மீன் வளம் (கால்நடை பராமரிப்பு, பால் வளம் மற்றும் மீன் வளத் துறை)**